# காலாண்டுத் தேர்வு விடை குறிப்பு 2024-2025
# கிருஷ்ணகிரி மாவட்டம்
# பத்தாம் வகுப்பு – சமூக அறிவியல்

**சரியான விடையை தேர்ந்தெடு**

1. **ஆ. ஜப்பான்**
2. **இ. ஹிரோஷிமா**
3. **ஆ. நேட்டோ**
4. **அ. பார்சி இயக்கம்**
5. **ஆ. 1829**
6. **இ. இலங்கை**
7. **ஆ. சம மழைக்கோடுகள்**
8. **ஈ.கட்ச்**
9. **இ. சணல்**
10. **ஈ. கோயம்புத்தூர்**
11. **ஈ. I.ii.iii சரியானவை**
12. **இ. தமிழ்நாடு**
13. **ஆ. கோல் கொண்டா சுல்தான்**
14. **இ. தமிழ்நாடு**

**சிறுவினா. 10×2=20**

15. **சீனா ஜப்பான் போர்**

**1894 ஜப்பான் சீனா மீது போர் செய்து வெற்றி பெற்றது. லீயோடங் தீவை கைப்பற்றி. ஆர்த்தர் துறைமுகத்துக்கு இணைத்து.**

16. டாலர் ஏகாதிபத்தியம்

அமெரிக்கா பின்பற்றிய கொள்கை. தொலை தூர நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்தல்

17. **மூன்று சர்வாதிகாரிகள்**

ஜெர்மனி – ஹிட்லர். இத்தாலி –முசோலினி. ஸ்பெயின் – பிராங்கோ.

18. மாவோவின் நீண்ட பயணம் பற்றி எழுதுக

ஷியாங் கேக் ஷேக் எதிராக 1934 மாவோ நீண்ட பயணம் மேற்கொண்டார் பயணத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் விவசாயிகள் ராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர்

6000 மைல்களைக் கடந்த நீண்ட பயணம்

19. பிரம்ம சமாஜம்

சதி ஒழிப்பு. உடன் கட்டை ஏறும் பழக்கம்.குழந்தை திருமணம் ஒழிப்பு . விதவைகள் மறுமணம் ஆதரிப்பது.

20. **மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்**

நர்மதா. தபதி. சபர்மதி.

21. **வேளாண் பருவகாலம்**

காரீஃப். ராபி. சையத்.

22. கரிசல் மண்ணின் பண்புகள்

டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்கள் கொண்டது

23. வளத்தை வரையறு

இயற்கையில் இருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்தும் இயற்கை வளங்களை எனப்படும் இவைகள் முறையை இரண்டு வகைப்படும் 1. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் 2. புதுப்பிக்க இயலாத வளங்கள்

24. தகவல் தொடர்பு

தகவல்கள் எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் பரிமாற்றமே தகவல் தொடர்பு

ஒன்று தனிமனித தகவல் தொடர்பு அஞ்சல் சேவை தந்தி தொலைபேசி

பொது தகவல் தொடர்பு அச்சு ஊடகங்கள் தொலைக்காட்சி

25. இந்திய குடியரசுத் தலைவர் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்

ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவபத்தின்படி வாக்காளர் குடும்பத்தார் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்

26. ஆளுநர் நியமிக்கப்படுவதற்கான தகுதிகள்

இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும். 35 வயது நிரம்பியுடன்

நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது

சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது

27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள்

சந்தைகள் விரைவான வளர்ச்சி அடைந்துள்ளது

புதிய அறிவியல் ஆராய்ச்சி அறிமுகமானது

நாட்டின் உற்பத்தி அதிகரித்துள்ளது

28. தமிழ்நாட்டில் உள்ள சில ஊட்டச்சத்து திட்டங்கள்

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்

ஆரம்பக் கல்வி தேசிய ஊட்டச்சத்து திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

மதிய உணவுத் திட்டம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

29. **1. கெஸ்டபோ**

**2. டாக்டர். சன் யாட் சென்**

**3. ஹைதராபாத்**

**4. Dr. சச்சிதானந்த சின்ஹா**

**5. வேளாண்மை**

www.Padasalai.Net

30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

- 1920-1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பலசிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டது.
- மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.
- 1920 இல் ஆலேண்டுதீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.
- பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது.
- போலந்திற்கும் ஜெர்மனிக்கு இடையே மேலைசைலேஷியா பகுதியில் எல்லைப்பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்துவைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத்தீர்த்து வைத்தது.
- 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.
- கிரீஸ்பல்கேரியாவின் மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர்நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ்போர் இழப்பீடு வழங்கவேண்டுமெனத் தீர்மானித்தது.
- ஆகவே 1925 இல்லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.

31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க

<u>**உலகம் இரு அணிகளாகப் பிரித்தல்**</u>:

- வல்லரசுகள் தலைமையிலான அணிகள் இரு துருவங்களாக பிரிந்தன.
- கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்கு அமெரிக்கா தலைமை தாங்கியது.
- மற்றோர் அணிக்கு ரஷ்யா தலைமை தாங்கியது.
- கம்யூனிச நாடுகள், கம்யூனிச அல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாக பிரிந்தன.

<u>**அணு ஆயுதப் பரவல்**</u>:

- அமெரிக்காவும் ரஷ்யாவும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கின.
- பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினம் உச்சத்தை எட்டின.

<u>**பன்னாட்டு முகமைகள்**</u>:

- உலக வங்கி
- பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

| 32 | 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும். |
|---|---|

- ✶ சமூகத்தில் நிலவி வந்த சதி எனும் உடன்கட்டை ஏறுதல்.
- ✶ குழந்தைத் திருமணம் மற்றும் பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கவழக்கங்கள்.
- ✶ விதவைப் பெண்கள் மறுமணம் செய்ய உரிமை மறுக்கப்பட்டது.
- ✶ பெண் அடிமைத்தனம், ஆணை விட பெண் கீழானவள் எனும் நடைமுறைகள் வரதட்சணைகள்.
- ✶ பெண் கல்வி மறுப்பு நடைமுறைகள்.
- ✶ எல்லையற்ற உபநிடதங்கள் போதனைகள்.
- ✶ பிராமணர் மேலாதிக்கம் செய்யும் சடங்கு முறைகள்.
- ✶ மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்களின் அதிக தாக்கங்கள்.
- ✶ பயங்கரமான சாதிக் கொடுமைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்கள்.
- ✶ மேலைநாட்டு பகுத்தறிவுச் சிந்தனைகளை ஏற்க மறுத்தது.

www.Padasalai.Net

| 33 | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1. | ஒரு குறிப்பிட்டஇடத்தில்வளிமண்டலத்தின் தன்மை | ஒருபகுதியின் நீண்டகாலவானிலைசராசரி |
| 2. | இது 24மணிநேரத்தின் பதிவுகள் | இது 30 முதல் 35 வருடவானிலைபதிவுகள் |
| 3. | **இவைமாறக்கூடியது.** | **இவைமாறாதது.** |

| ii. | உள்நாட்டுவணிகம் | பன்னாட்டுவணிகம் |
|---|---|---|
| 1. | ஒருநாட்டின் எல்லைக்குள்நடைபெறும் வணிகம். | இரண்டுஅதற்குமேற்பட்டநாடுகளுக்கிடையேநடைபெறும் வணிகம். |
| 2. | உள்நாட்டுநாணயம் பயன்பாடு | டாலர், யூரோபயன்பாடு |
| 3. | **எ.கா. அசாம், தேயிலை, கேரளா, ரப்பர்** | **எ.கா. பெட்ரோல், அரேபியா, இந்தியா** |
| 4. | நிலவழிவணிகம் | கடல்மற்றும் வான்வழிவணிகம் |

34. **தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

- தென்னிந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படும்.
- மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
- தீபகற்பஆறுகள்பாயும்திசையின்அடிப்படையில்இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. 1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்.

**கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்.**

**மகாநதி:**

- நீளம்: 851 கி.மீ.
- உற்பத்தியாகும் இடம்: சத்தீஸ்கார் மாநிலம் ராய்ப்பூர் மாவட்டத்தில் சிகாவிற்கு அருகே உற்பத்தியாகிறது.
- ஒடிசா மாநிலத்தின் வழியாக வங்காள விரிகுடாவில் பாய்கின்றது.
- துணையாறுகள்: சீநாத், டெலன், சித்ரட்லா, சந்தூர், நன்.

**கோதாவரி:**

- நீளம்: 1465 கி.மீ.
- வடிகாலமைப்பு பரப்பளவு: 3.13 இலட்சம் ச.கி.மீ.
- உற்பத்தி: மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- துணையாறுகள்: பூர்ணா, இந்திராவதி, பென்கங்கா.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- கலக்குமிடம்: ஆந்திரா வழியாக வங்காள விரிகுடாவில்.

**கிருஷ்ணா:**

- நீளம்: 1400 கி.மீ.
- வடிகாலமைப்பு பரப்பளவு: 2.58 இலட்சம் ச.கி.மீ
- உற்பத்தியாகும் இடம்: மகாராஷ்டிரா மாநிலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் மகாபலேஷ்வர் என்ற நீர் வீழ்ச்சியில் உருவாகிறது.
- துணையாறுகள்: கொய்னா, பீமா, துங்கபத்ரா.
- கலக்குமிடம்: ஆந்திரா வழியாக வங்காள விரிகுடாவில்.

**காவிரி:**

- நீளம்: சுமார் 800 கி.மீ.
- உற்பத்தியாகும் இடம்: கர்நாடகா மாநிலம் குடகுமலையில் உற்பத்தியாகிறது.
- தென்னிந்தியாவின் கங்கை என்று அழைக்கப்படுகிறது.
- கலக்குமிடம்: தமிழகம் வழியாக வங்காள விரிகுடாவில்.

**மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்:**

**நர்மதை:**

- நீளம்: 1312 கி.மீ.
- வடிகாலமைப்பு பரப்பளவு: 98796 ச.கி.மீ.
- உற்பத்தியாகும் இடம்: மத்தியபிரதேசத்தில் அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
- கலக்குமிடம் : அரபிக்கடல்

**தபதி:**

- நீளம்: 724 கி.மீ.
- வடிகாலமைப்பு பரப்பளவு: 65145 ச.கி.மீ.
- உற்பத்தியாகும் இடம்: மத்தியப்பிரதேசம் முல்டாய் பகுதியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
- கலக்குமிடம்: அரபிக்கடல்

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

35. **இந்திய மண்வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.**

வண்டல் மண், கரிசல் மண், செம்மண், சரளை மண், உவர் மண்.

| மண் வகைகள் | பண்புகள் | பரவல் | பயிர்கள் |
|---|---|---|---|
| வண்டல் மண் | காதர்: வெளிர் நிறமுடைய மணற்பாங்கான மண். பாங்கர்: சுண்ணாம்பு மற்றும் களிமண் கொண்ட பழைய வண்டல் படிவுகள் - அடர் நிறமுடையது. | கங்கை - பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள். | நெல், கோதுமை, கரும்பு, வாழை. |
| கரிசல் மண் | ஈரமாகவும் சேறாகவும் இருக்கும். உருவாகுதல்: தக்காண பீடபூமியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து. டைட்டானியம், இரும்பு தாதுக்கள் கொண்டது. | மகாராஷ்டிரம் - மாளவப் பீடபூமி - கத்தியவார் தீபகற்பம். | பருத்தி, தினை, எண்ணெய், வித்துக்கள், புகையிலை. |
| செம்மண் | உருவாகுதல்: பழமையான படிகப் பாறைகளான கிரானைட், நைஸ் பாறைகள் சிதைவுறுதலில் உருவானது. | தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், தக்காண கிழக்கு பகுதி. | நெல், கரும்பு, பருப்பு வகைகள். |
| சரளை மண் | உருவாகுதல்: வெப்பம் மற்றும் குளிர்வுகளின் அடுத்தடுத்த மாற்றத்தால் உருவானது. | அசாம் மலைப் பகுதி, கர்நாடகா, மேற்குத் தொடர்ச்சி மலை, கேரளா மலைப்பகுதிகள். | காபி, ரப்பர், முந்திரி, மரவள்ளிக் கிழங்கு. |
| காடு மற்றும் மலை மண் | உருவாகுதல்: பனிமழை - வெப்பநிலை மாறுபாட்டால் உருவானது. | ஜம்மு காஷ்மீர், இமாச்சல், உத்திரகாண்ட். | காபி, தேயிலை, நெல், மக்காச்சோளம், உருளை, பார்லி. |

36. **இந்தியத் தொழிலகங்கள் எதிர்க்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.**
- மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் விநியோகம்.
- தொழிற்சாலைகள் நிறுவ பரந்த நிலப்பரப்பு இல்லை.
- கடன் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் அதிகம்.
- கடனுக்கான வட்டி விகிதம் அதிகம்.
- குறைவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைப்பதில்லை.
- ஊழியர்களுக்கு தொழில்நுட்பத்தில் முறையான பயிற்சி இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கு அருகில் உழைப்பாளிகள் வசிக்க ஏற்ற சூழல் இல்லை.

37. **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**
- உலகில் எழுதப்பட்ட எல்லா அரசியலமைப்புகளுள் மிகவும் நீளமானது.
- இதன் பல்வேறு அம்சங்கள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
- நெகிழும் தன்மை மற்றும் நெகிழாத் தன்மை கொண்டது.
- கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது (மத்திய - மாநில அரசுகள்)
- மத்திய மற்றும் மாநிலங்களில் நாடாளுமன்ற சட்டமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- அனைவருக்கும் சுதந்திரமான நீதியை வழங்குகிறது.
- எந்தவிதமான வேறுபாடின்றி 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகிறது.
- குடிமக்களுக்கு ஒற்றைக் குடியுரிமை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், அட்டவணைப்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சிலருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

**38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?**

**பிரதம அமைச்சரின் பணிகள்:**

- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் கூறுகிறது
- அமைச்சரவையின் தலைவர்.
- அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கின்றார்.

**பிரதம அமைச்சரின் கடமைகள்:**

- குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் பாலமாக செயல்படுதல்.
- நாட்டின் உண்மையான அதிகாரமிக்க தலைவர்.
- நாட்டின் மக்களுக்கான செய்தித் தொடர்பாளர்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் மாநாடுகளில் நாட்டின் சார்பில் கலந்து கொள்ளும் முக்கியப் பிரதிநிதியாக விளங்குகின்றார்.
- மக்களவைக்கு ஒட்டு மொத்த பொறுப்புடையவர்.

**39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.**

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பயணிகளின் மொத்த மதிப்பாகும்.

**மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**

மொத்த நாட்டு உற்பத்தி என்பது நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் ஈட்டிய வருமானம் + உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் ந பணிகளின் மதிப்பைக் குறிக்கும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பைக் குறிக்கும்.

**நிகர நாட்டு உற்பத்தி (NDP):**

நாட்டின் மொத்த உற்பத்தியில் தேய்மானம் கழித்த பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

**தலா வருமானம் (PCI):**

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP):**

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை கழித்த பின் கிடைப்பது.

40. **பொது விநியோக முறையை விவரிக்கவும்.**

**அறிமுகம்:**

- இந்திய பொருளாதாரத்தில் நீடித்த வறுமையின் அளவைக் கருத்தில் கொண்டு பொது வழங்கல்முறை மூலம் உணவு தானியங்களை மானிய விலையில் வழங்கச் செய்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**உலகளாவிய பொது வழங்கல் முறை:**

- தமிழ்நாடு அரசு உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.
- மத்திய மாநில அரசுகள் பொது வழங்கல் முறைக்கு மானியங்கள் கொடுத்து உதவுகின்றன.

**இலக்கு பொது வழங்கல் முறை:**

- இலக்கு பொது வழங்கல் முறையில் பயணிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது.

**மானியங்கள் அளித்தல்:**

- மத்திய மாநில அரசுகள் ஏழை, எளியமக்கள் பயன்பெறும் வகையில் பொது விநியோக முறையில் மானியங்கள் அளிக்கின்றன.
- மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகின்றது.

41. காலக்கோடு 1910 – 1940

1910

1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
1912 – முதல் பால்கன் போர்
1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்
1917 – ரஷ்யப் புரட்சி
1918 – முதல் உலகப் போர் முடிவு
1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்
1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1930


1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
1934 – நீண்ட பயணம்
1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது
1938 – மியூனிச் உடன்படிக்கை
1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940

1940 – பிரிட்டன் போர்

www.Padasalai.Net

43. உலக வரைபடம்




www.Padasalai.Net

**43. அ. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

- 1919 ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, மியூனிச் நகரில் சந்தித்து தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக நாசி (Nazi) கட்சியை நிறுவியது.
- ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
- முதல் உலகப்போரின் போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
- அவரின் ஆற்றல் மிக்க உரை வீரர்களைத்தட்டி எழுப்பியது.
- 1923இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சியை மேற்கொண்டார்.
- மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.
- சிறையில் இருந்த போது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான மெயின்காம்ப் (Mein kampf - எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.
- 1932 இல் நடைபெற்ற குடியரசுத்தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர். முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்க தொடங்கினர்.
- இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

www.Padasalai.Net

43. ஆ. **பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.**

**இராஜாராம் மோகன்ராய்:**

- சமூக சீர்திருத்தவாதியின் சிற்பி.
- வில்லியம் பெண்டிங் பிரபு 1829 இல் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்து சட்டமியற்ற மிகவும் உறுதுணையாக இருந்தார்.
- குழந்தைத் திருமணம், பலதார மணம் ஆகியவற்றை எதிர்த்தார்.
- பெண் அடிமைத்தனத்தை எதிர்த்தார்.
- விதவைப் பெண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமை உண்டு என்றார்.

**ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்:**

- இந்து சமய மறை நூல்களில் கூட விதவை மறுமண மறுப்பு இல்லை எனக் கூறினார்.
- இவர் இயக்கத்தின் முயற்சியால் 1856 ஆம் ஆண்டில் விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.
- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.
- பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவினார்.

**கேசவ சந்திர சென்:**

- குழந்தை திருமண முறைக்கு எதிராக கடுமையாகப் போராடியவர்.

**மகாதேவ் கோவிந்த் ரானடே.**

- இவர் விதவைகள் மறுமணம், சாதி மறுப்புத் திருமணம் இவற்றுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- விதவை மறுமணச் சங்கம், புனே ஜர்வசனிக் சபா, தக்காணக் கல்விக் கழகத்தை ஆரம்பித்தார்.

**சுவாமி தயானந்த சரஸ்வதி:**


- தனது ஒரே ஆரிய சமாஜ இயக்கத்தின் மூலம் குழந்தைத் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.
- விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

**ஜோதிபா புலே:**

- குழந்தைத் திருமண எதிர்ப்பில் உறுதியாக இருந்தார்.
- விதவைகள் காப்பகம் அமைத்தார்.
- ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் முன்னேற்றத்திற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.
- தனது குலாம்கிரி (அடிமைத்தனம்) நூலின் மூலம் சமூகக் கொடுமைகளை கண்டனம் செய்தார்.

www.Padasalai.Net


44. அ. இந்திய வரைபடம்




www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

44. ஆ. இந்திய வரைபடம்




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com